NSW கல்வித் திணைக்களம்

Notice of extension of suspension

Using the telephone interpreter service to contact the school

# இடைநீக்கம் நீட்டிப்பிற்கான அறிவிப்பு

## பாடசாலையைத் தொடர்பு கொள்ள தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவையைப் பயன்படுத்துதல்

மாணவரின் பெயர்

Name of student

அன்புள்ள பெற்றோர்/பராமரிப்பாளர்

NSW கல்வித் துறை மாணவர் நடத்தைக் கொள்கை மற்றும் இடைநீக்கம் மற்றும் வெளியேற்றும் நடைமுறைகளின்படி உங்கள் குழந்தைக்கு நான் வழங்கிய இடைநீக்க நீட்டிப்பு அறிவிப்பின் விபரங்களை இணைக்கப்பட்ட கடிதம் கோடிட்டுக் காட்டுகிறது.

இடைநீக்கத்தின் புதிய முடிவுத் தேதியை இந்த கடிதம் உங்களுக்கு வழங்குகிறது மற்றும் இடைநீக்கத்தைப் பற்றி கலந்துரையாட மற்றும் உங்கள் குழந்தை பாடசாலைக்கு திரும்பும் போது ஆதரவுதவியை திட்டமிடுவதற்கான தீர்மானக் கூட்டத்தில் கலந்துகொள்ள உங்களை அழைக்கிறது. பாடசாலை உங்களைத் தொடர்பு கொள்ளும்போது, சந்திப்பின் போது உங்களுக்கு உரைப்பெயர்ப்பாளர் தேவைப்பட்டால் தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள், நாங்கள் அதை ஏற்பாடு செய்வோம். இணைக்கப்பட்ட கடிதத்தைப் புரிந்துகொள்வதில் உங்களுக்கு சிரமம் இருந்தால், தயவுசெய்து பாடசாலையைத் தொடர்பு கொள்ளவும், நாங்கள் உங்களுக்கு விளக்கம் அளிப்போம்.

பள்ளிக்கூடத்தை தொடர்புகொள்ள உங்களுக்கு உரைப்பெயர்ப்பாளர் ஆதரவுதவி தேவைப்பட்டால், தயவு செய்து 131 450 என்ற எண்ணிற்கு அழைத்து உங்கள் மொழி பேசும் உரைப்பெயர்ப்பாளரைக் கேளுங்கள். நீங்கள் அழைக்க விரும்பும் எண்ணை தொலைபேசி இயக்குனரிடம் சொல்லுங்கள், உங்கள் உரையாடலில் உங்களுக்கு உதவ அவர் ஒரு உரைப்பெயர்ப்பாளரை அழைப்பில் இணைப்பார். இந்த சேவைக்காக உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது.

அதிபர் பெயர்

Name of Principal

அதிபரின் தொலைபேசி எண்

Principal’s phone number